DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 107/2011

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : **ஹரிகிருஷ்ணன்** | Father/Husband Name | : **ராமச்சந்திரன்** |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 13.05.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13 day of 05.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது மேலூரில் குடியிருந்து வருகிறேன். கொழு கம்பெனி வைத்துள்ளேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 09.07.2009ம் தேதி சுந்தரி அம்மன் கோவில் கும்பாபிஷேகத்தின் போது எனது மைத்துனரின் தாயார் பரமேஷ்வரியை 6 பவுன் தங்க செயின் தாலியுடன் காணாமல் போய்விட்டது. அதுகுறித்து பரமேஷ்வரியின் மகன் ராஜ்குமார் கீழவளவு காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். நகை திருட்டு போன விவரத்தை அந்த நகை வாங்கிய மேலூர் பாக்யா நகை கடையிலும் சொல்லி வைத்திருந்தோம். அதன்பின்னர் 30.12.2009ம் தேதி மேலூர் பாக்யா நகைகடையில் ஆஜர் எதிரி ராணி அந்த நகையை விற்க எடுத்து வந்திருந்தார், உடனடியாக அந்த நகைகடையின் உரிமையாளர் போன் மூலம் பரமேஷ்வரியின் மகனுக்கு ஆஜர் எதிரி நகையை எடுத்து வந்த விவரத்தை சொன்னார். உடனடியாக நானும், ராஜ்குமாரும், பாக்யா நகைகடைக்கு சென்றோம். ஆஜர் எதிரி வைத்திருந்த நகை எங்களுடையது என்று உறுதி செய்து அதன்பின்னர் நான், ராஜ்குமார் மற்றும் பாக்யா கடை உரிமையாளர் சின்னன்னன் ஆகியோர் எதிரி ராணியுடன் கீழவளவு காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். ராணியை விசாரித்து அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்கள்.

தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2ம் கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2ம் கையொப்பம் அசாஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** அதன்பின்னர் போலீசார் எனது முன்னிலையில் எதிரியிடமிருந்து நகையை கைப்பற்றினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2ம் கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த அத்தாட்சியில் உள்ள 2ம் கையொப்பம் அசாஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர்**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

இவ்வழக்கின் நகையை பாக்யா நகை கடை உரிமையாளரிடம் பார்த்தேன் என்றால் நகை கடை உரிமையாளர் ராணியிடமிருந்து வாங்கி வைத்திருந்தார், நான் அதை நான் பார்த்தேன். நகை கடை உரிமையாளர் எதிரி ராணியிடமிருந்து நகையை வாங்கியதை நான் பார்க்கவில்லை என்றால் இல்லை. நகை கடைக்கு ராஜ்குமார் அழைத்ததன்பேரில் நான் அங்கு வந்தேன் என்றால் சரிதான். நானும், எனது மைத்துனர் ராஜ்குமாரை தவிர வேறு பொதுமக்கள் யாரும் வரவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் நானும், எனது மைத்துனரும்தான் கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரிதான். நகை காணவில்லை என்று யார் புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது என்றால் ராஜ்குமார் புகார் கொடுத்தாரா அல்லது அவரது தாயார் புகார் கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது. நகை தொலைந்ததிலிருந்து எத்தனை நாட்கள் கழித்து நகை கிடைத்ததாக நகை கடைக்காரர் எங்களுக்கு தகவல் கொடுத்தார் என்றால் 5 மாதம் கழித்து நகை கிடைத்தது. அந்த நகையை புகார்தாரர் பாக்யா நகைகடையில் வாங்கியபோது நான் அங்கு சென்றேனா என்றால் இல்லை. எனது மைத்துனார் எத்தனை மணிக்கு எனக்கு போன்செய்தார், எத்தனை மணிக்கு நான் அங்கு சென்றேன் என்றால் 01.00 மணிக்கு போன் செய்தார், 1/4 மணி நேரத்தில் அங்கு

சென்றுவிட்டேன். அங்கு எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் எனது மைத்துனர் எப்போது அங்கு சென்றார் என்று எனக்கு தெரியாது, நான் அங்கு 1/2 மணி நேரம் அங்கு இருந்தேன். நாங்கள் தகவல் சொல்லி போலீசார் நகை கடைக்கு வந்தார்களா என்றால் இல்லை, நான், எனது மைத்துனர், நகை கடை உரிமையாளர் காவல் நிலையத்திற்கு சென்றோம். கீழவளவு காவல் நிலையத்திற்கு சென்றோம், எவ்வளவு நேரம் அங்கு இருந்தோம் என்றால் 03.00 மணிக்கு சென்றோம், 1 மணி நேரம் அங்கு இருந்தோம்.

2) போலீசார் என்ன ஆவணம் தயார் செய்திருந்தார், அதில் என்ன விவரம் எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியாது என்றால் நீண்ட நாட்கள் ஆகிவிட்டதால் தற்போது ஞாபகம் இல்லை. போலீசார் என்னை எவ்வளவு நேரம் விசாரித்தார்கள் என்றால் அன்றையதினமே 20 நிமிடம் விசாரித்தார்கள். மற்றவர்களை எப்போது விசாரித்தார்கள் என்று எனக்க தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கில் திருட்டுபோன நகை தங்க தாலியுடன் கூடிய செயின் என்றால் சரிதான். அதில் தாலி எவ்வளவு பவுன், செயின் எவ்வளவு பவுன் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், மொத்தம் 6 பவுன்.

3) நான் சொன்னதுபோல், சொன்னதேதியில், சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, நான் சம்பவம் இடம் சென்று பார்க்கவில்லை சரியல்ல, புகார்தாரர் எனது மைத்துனர் என்பதனால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை, எனது முன்னிலையில் எந்த பொருளும் கைப்பற்றவில்லை, பரமேஷ்வரி எனது தங்கையின் மாமியார் என்பதனால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பரமேஷ்வரி இவ்வழக்கில் திருட்டுபோன நகையை அணிந்து விழாவிற்கு சென்றதாகவோ, அந்த நகையை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல, அனைவரும்தான் சென்றோம், நகை காணாமல் போன பின்னர்தான் அதைப்பற்றி எனக்கு தெரியும்.